பதிவு எண் : M. 6311 ★ தொலைபேசி : 51331 நிறுவியது : 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர் : இரா. செழியன் எம்.ஏ. எம்.பி.

மலர் : 16] சென்னை : ஐப்பசி 6 (22—10—68) செவ்வாய் ★ வெளியூர் : ஐப்பசி 7 (23—10—68) புதன் [இதழ் : 104

உலக மக்கள் தொகை

"உலகத்தின் மக்கள் தொகை ஒரு நாளுக்கு 1,80,000 வீதம் பெருகிக் கொண்டிருக்கிறது; இப்படியே போய்க்கொண்டிருந்தால் 2006-வது ஆண்டில் --- அதாவது இன்னும் 38 ஆண்டுகளில் உலகத்தின் மக்கள் தொகை இரட்டிப்பாக ஆகிவிடும்"

என்று ஐ. நா. ஆண்டு அறிக்கை ஒன்று கூறுகிறது.

உலக மக்கள் தொகையில் 75 சதவிகிதத்தினர் பின்தங்கிய பகுதிகளில் வாழ்கின்றனர்; பாதிப் பேருக்குமேல் ஆசியாவில் இருக்கின்றார்கள்.

காங்கிரசாரின் கனவு பொய்த்தது!

'வராது' என்ற திட்டம் வந்துவிட்டது!

காவிரி நீர்த் திட்டத்துக்கு டில்லி ஒப்புதல் --- விரைவில் வேலை தொடங்கும்

சென்னையில் அமைச்சர் கருணாநிதி அறிவிப்பு

சென்னை, அக். 22—

"காவிரி நீர்த் திட்டத்திற்கு மாநில அரசு பொறுப்பேற்றுக் கொண்டு ஒப்புதல் அளித்து -- முன் செலவுகளுக்காக ரூ. 25 இலட்சம் ஒதுக்கப்பட்டு -- பொறியிலாளர்களின் சிறப்புக் குழு அமைக்கப்பட்டு -- ஆரம்ப வேலைகள் துவக்கப்பட்டிருக்கின்றன.

"ஐந்து கோடி ரூபாய்க்கு மேல் மதிப்புள்ள எந்தத் திட்டத்திற்கும் மத்திய அரசிடம் மரபுக்காக ஒப்புதல் பெற வேண்டும்; இந்தத் திட்டத்தைப் பொறுத்தவரையில் அந்த அனுமதியை இரண்டு கட்டத்தில் பெற வேண்டும்.

"முதலாவது கட்டம்:—மத்திய சுகாதார அமைச்சகத்திலிருந்து ஒப்புதல் பெற வேண்டும். பத்து நாட்களுக்குமுன் அந்த அனுமதி கிடைத்துவிட்டது.

"இரண்டாவது கட்டம்:—திட்டக் குழுவின் ஒப்புதல் பெற வேண்டும்; சில நாட்களுக்குமுன் நான் கூட்டங்களில் தெரிவித்தபடி, திட்டக் குழுவைச் சார்ந்த அதிகாரியைச் சந்தித்தபோது, 'திட்டக் குழுவின் ஒப்புதல் கிடைத்துவிடும்' என்ற நம்பிக்கையை அவர் தெரிவித்தார்.

"அதன்படி நமது மாநில அதிகாரிகள் டில்லி சென்று திட்டக் குழுவுடன் பேச்சுவார்த்தை நடத்தினர்; அதன் விளைவாக இன்றையத்தினம் காவிரி நீர்த் திட்டத்திற்குத் திட்டக் குழு ஒப்புதல் தந்துவிட்டது என்ற மகிழ்ச்சிச் செய்தியைத் தெரிவித்துக்கொள்கிறேன். காவிரித் தாய் பற்றிக் கேவலமாகப் பேசிய சுப்பிரமணியத்திற்கும் தெரிவித்துக்கொள்கிறேன்.

"உடனடியாகக் காவிரி நீர்த் திட்ட வேலைகள் துவக்கப்பட்டுத் துரிதமாக நடைபெறும்.

"காவிரி நீரை இருநூறு மைல்களுக்கு அப்பாலிருந்து இறைவை இயந்திரங்கள் மூலம் -- குழாய்கள் வழியாகக் கொண்டுவருவோம்; அப்போது சென்னையில் உள்ள மக்கள் தாராளமாகக் காவிரி நீரை அருந்தலாம். இப்போது கேலி பேசும் காங்கிரசுக்காரர்களும் அந்தக் காவிரி நீரை அள்ளி அள்ளிக் குடிக்கலாம்!

"இன்று படி அரிசி வாங்கிச் சாப்பிட்டுவிட்டு, 'தி.மு. கழகம் என்ன சாதித்துவிட்டது' என்று கேட்பது போல், அப்போது காவிரி நீரையும் அள்ளி அள்ளிப் பருகிவிட்டு, 'தி.மு. கழகம் என்ன சாதித்துவிட்டது' என்றும் கேட்கலாம்!"

இவ்வாறு பொதுப் பணித்துறை அமைச்சர் மு. கருணாநிதி அவர்கள். தேர்தல் பிரச்சாரக் கூட்டங்களில் கலந்துகொண்டு பேசுகையில் சுட்டிக்காட்டித் தெரிவித்தார். இதுபற்றி அவர் குறிப்பிட்டுப் பேசியதாவது :—

"காங்கிரசுக்காரர்களால் இப்போது எதனையும் தெளிவாகச் சிந்திக்க முடிவதில்லை; கழகத்தை -- கழகத் தலைவர்களைத் திட்டித் தீர்ப்பதிலும், பொய்ச் செய்திகளைப் பரப்பிவருவதிலுமே வெற்றி கண்டுவிட முடியும் என எண்ணிக்கொண்டிருக்கின்றனர்!

"சாதாரணமானவர்கள் சொன்னால்கூட விட்டுவிடலாம்; மிகப் பெரிய பொறுப்புகளில் இருந்த பக்தவத்சலம், சுப்பிரமணியம் போன்றவர்கள்கூட இப்படிப்பட்ட பிரசாரத்தைச் செய்து வருகிறார்கள்!

"சுப்பிரமணியம் அவர்கள், 'காவிரி நீர்த் திட்டம் வராது' என்று மாநகராட்சித் தேர்தல் கூட்டங்களில் கூறிவருகிறார்;

அந்தத் திட்டம் பற்றிய முழு விவரத்தையும் உங்களுக்கு எடுத்துக்கூற விரும்புகிறேன்.

"பெருகிவரும் சென்னை நகர மக்கள் தொகையின் குடிநீர்த் தேவையைக் கணக்கெடுத்து, தி.மு. கழகம் மாநகராட்சிப் பொறுப்பேற்றதும் காவிரி நீரைச் சென்னைக்குக் கொண்டு வரும் திட்டத்தைப் பரிசீலித்தது; 1959-ம் ஆண்டில், ரூ. 17 கோடி செலவில் அத்திட்டத்தைத் தீட்டி, அப்போது மாநில அரசுப் பொறுப்பில் இருந்த காங்கிரசு அமைச்சர்களிடம் அளித்தது.

திட்டம் நல்ல திட்டமாக இருக்கிறது என்பதை அந்த அமைச்சர்கள் உணர்ந்தார்கள்; ஆனால், திட்டத்தை நிறைவேற்றிவிட்டால், 'அந்த நல்ல பெயர் தி. மு. கழக மேயருக்குப் போய்விடுமே -- பிறகு மாநகராட்சியில் காங்கிரசு இடம் பெற முடியாதே' என்ற பரந்த மனப்பான்மை காரணமாக அந்தத் திட்டத்தைக் குப்பைக் கூடையில் போட்டுவிட்டார்கள்!

கட்சி நோக்கம் இல்லாமல் அப்போதே அந்தத் திட்டத்தை நிறைவேற்றியிருந்தால், ரூ. 17 கோடியில் அந்தத் திட்டம் நிறைவேறியிருக்கும்; இப்போது அந்தத் திட்டத்தின் மதிப்பு ரூ 25 கோடியாகிவிட்டது!

இந்த எட்டுக் கோடி ரூபாய் நட்டம், அவர்களது அலட்சியத்தால் --- அவர்களது கட்சிக் கண்ணோட்டத்தால் ஏற்பட்டது!

அதன் பின்னர் தி. மு. கழகம், மாநில ஆட்சிப் பொறுப்பை ஏற்றது; 'இன்னும் தாமதித்தால் காவிரி நீர்த் திட்டச் செலவு ரூ. 25 கோடிக்கும் அதிகமாகிவிடும்' என்ற காரணத்தாலும், 'மாநகராட்சியிலும் தி. மு. கழகம் --- மாநில ஆட்சியிலும் தி. மு. கழகம்' என்ற நிலை ஏற்பட்டதாலும், அத்திட்டத்தைத் தி. மு. கழக அரசு உடனடியாக நிறைவேற்றத் திட்டமிட்டது; அதற்கான ஆரம்ப வேலைகளையும் துவக்கியது.

ஆனால், சுப்பிரமணியம் போன்றவர்கள், 'வராத ஒரு திட்டத்திற்குச் சினிமாப் பொம்மையை வைத்து, 'காவிரித் தாய்' என்று விழாக் கொண்டாடலாமா? காவிரி நீர்த் திட்டம் வராது; கருணாநிதி கதை அளக்கிறார்' என்ற பொருளில் பேசியிருக்கிறார்!"

கலைவாணருக்கு உருவச் சிலை

சன. 14-ல் நிறுவ முடிவு

சென்னை, அக். 22—

காலஞ்சென்ற கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் அவர்களுக்கு உருவச் சிலை நிறுவுவதென உலகத் தமிழ் மாநாட்டு ஊர்வலக் குழு முடிவு செய்திருக்கிறது.

அடுத்த ஆண்டு சனவரி 14-ம் நாளன்று சென்னை நகரில் சிலைத் திறப்புவிழா நடைபெறும்.

இதற்காக ஏற்படும் செலவுகள், உலகத் தமிழ் மாநாட்டு ஊர்வலப் படத்தின்மூலம் கிடைக்கும் வருமானத்திலிருந்து சரிக்கட்டப்படும்.

குழுத் தலைவர் எஸ். எஸ். வாசன் கன்வீனர் ஏ. எல். சீனிவாசன் ஆகியோர், அமைச்சர் மு. கருணாநிதி அவர்களைச் சந்தித்துப் பேசியதைத் தொடர்ந்து இம்முடிவு மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

சி. சுப்பிரமணியத்தின் கவனத்துக்கு :

வரி குறைந்ததா-- வசதி பெருகியதா?

அரங்கம் கிடைக்காத நாட்டியக்காரி அறையினுள் ஆடிப் பார்த்துத் திருப்திப்பட்டுக் கொள்ளுவதுபோல், பெரிய பிரச்சினைகளைப் பேசுவதற்கு வேறு இடமோ, சந்தர்ப்பமோ கிடைக்காததனால், தமிழ்நாடு காங்கிரசின் தலைவர், சென்னை மாநகராட்சித் தேர்தலை ஒரு சந்தர்ப்பமாகப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார் போலிருக்கிறது!

"வரி குறைந்ததா --
வசதி பெருகியதா ?"

எனக் கேட்டு, தேர்தல் பிரசாரத்தின் மூலம் புதியதொரு கொள்கை முழக்கத்தை அறிமுகப்படுத்தியிருக்கிறார்.

வரி குறைந்ததா ?
வசதி பெருகியதா ?

சொல்வதற்கும் கேட்பதற்கும் எளிமையான ஆனால் பொருளுள்ள -- அழகான ஆனால் ஆரவாரமற்ற கேள்விக் கணைதான்!

ஆனால், அதனைப் பயன்படுத்த சி. சுப்பிரமணியம் அவர்கள் தேர்ந்தெடுத்துக் கொண்டிருக்கின்ற இடம்தான் சரியல்ல!

இந்தியாவை முழுமையாக இப்போதும் ஆண்டுவரும் மத்திய அரசைப் பார்த்து அனைவரும் அன்று முதல் இன்று வரை கேட்டு வரும் கேள்வி—

"வரி குறைந்ததா ?
வசதி பெருகியதா ?"

என்பதுதான்!

எல்லா மாநிலங்களையும் இருபதாண்டுக் காலம் ஆண்டு அனுபவித்த அனைத்திந்தியக் காங்கிரசைப் பார்த்து ஏனைய எல்லாக் கட்சியினரும், அன்று முதல் இன்று வரை கேட்டு வந்திருக்கும் கேள்வி—

வரி குறைந்ததா --
வசதி பெருகியதா --

என்பதுதான்!

ஆனால் சி. சுப்பிரமணியம், இப்போதுதான் ஒரு முன்னாள் அமைச்சராக ஆகியிருக்கிறார்!

அதற்கும் பின்னால்தான் எதிர்க்கட்சியின் தலைவராக இருக்கும் பேறு பெற்றிருக்கிறார்!

எனவேதான், காலதாமதமாகக் கேட்கிறார்—

வரி குறைந்ததா --?
வசதி பெருகியதா ?--

என்று!

கேட்டிருப்பது சரி; ஆனால் கேட்டிருக்க வேண்டிய நேரம், மாநகராட்சித் தேர்தல் நேரத்தின்போது அல்ல!

இருபதாண்டுகள் இந்தியா முழுமையும் காங்கிரசு அரசாண்ட கணக்கை மறந்துவிட்டு, பத்தாண்டுகள் சென்னை மாநகராட்சி தி. மு. கழகத்தின் வசம் இருந்ததனை மட்டும் கணக்கில் வைத்துக் கேட்டிருக்கிறார்— முன்னாள் கனம் சி. சுப்பிரமணியம்!

தி. மு. கழகம், மாநகராட்சியை ஆண்ட சுமார் பத்தாண்டுக் காலத்தின்போதும், ஏறக்குறைய எட்டாண்டுகளுக்குமேல் தமிழகத்தின் ஆட்சி காங்கிரசின் வசம்தான் இருந்தது என்பதனைப் புரிந்துகொள்ளாமல், கேள்விக் கணை எய்தியிருக்கிறார் -- சி. சுப்பிரமணியம்!

காங்கிரசு சென்னை மாநிலத்தை ஆண்ட சுமார் இருபதாண்டுக் காலத்தின் இடையில்தான், ஏறக்குறைய எட்டாண்டுக் காலம் மாநகராட்சி நிர்வாகம், தி. மு. கழகத்தின் வசம் இருந்திருக்கிறது என்பதனை மறைக்கப் பார்க்கும் சுப்பிரமணியத்தின் மனோபாவம், முழுப் பூசணியை ஒரு சோற்றுப் பருக்கையில் திணிக்கப் பார்க்கும் ஏமாற்று வேலையைத்தான் நினைவுபடுத்துகிறது!

இம்மாநிலத்தைக் காங்கிரசு ஆண்டு கொண்டிருந்தபோது, சென்னை மாநகராட்சியைக் கழகம் ஒரு தனியாட்சியாக நடத்திக் கொண்டிருக்கவில்லை; மாநில அரசின் ஆளுகைக்கு உட்பட்ட ஒரு நகர நிர்வாக அமைப்பாகத்தான், தி. மு. கழகம் ஆண்டு கொண்டிருந்தது!

சி. சுப்பிரமணியம் இதனையும் தெரிந்து கொண்டிருப்பதாகக் காட்டிக் கொள்ளவில்லை!

தி. மு. கழகம் மாநகராட்சியைக் கைப்பற்றிய பிறகு, மக்களின் வசதி பெருகுவதற்காகத் தயாரித்த எத்தனையோ திட்டங்களுக்கு --- எட்டாண்டுக் காலமாக --- அப்போது கோட்டையில் இருந்த சுப்பிரமணியத்தின் நிர்வாகம் தடைக்கல்லாக இருந்து வந்திருக்கிறது!

கோட்டையிலும் தி. மு. கழகம் வந்த பதினெட்டே மாதங்களில் கோடிக்கணக்கான செலவில் பரிமளித்திருக்கும் திட்டங்கள்தான்—

காவிரி நீர்
கூவம் சீரமைப்பு
பள்ளிக் குழந்தைகட்குப் புத்தகம் வழங்குதல்

ஆகியவை!

இம்மாநிலத்தைக் காங்கிரசு

(4-ம் பக்கம் பார்க்க)

சென்னை மாநகராட்சி மன்றத் தேர்தல்

போட்டியிடும் வேட்பாளர்களின் முழுப் பட்டியல்

அக்டோபர் 27-ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமையன்று நடைபெறவிருக்கும் சென்னை மாநகராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களின் பட்டியல் முழு விவரம் இங்கு தரப்படுகிறது.

வண்ணைத் தொகுதி

1. தண்டையார்பேட்டை
கே. துரைராசு (தி.மு.க.)
க. மதுரை (காங்கிரஸ்)

2. ம. பொ. சி. நகர்
பி. நமசிவாயம் (வலது கம்யூ.)
ப. தங்கராஜ் (காங்.)
கே. சாரங்கபாணி (சுயே)
தி. சே. இராசாராம் (சுயே)

3. கிரேஸ் கார்டன்
பி. ஏ. என். இராசரத்தினம் (தி.மு.க.)
வரதப்ப நாயக்கர் (காங்)
எஸ். பி. டி. திராவிடமணி (சுயே)
எஸ். மாரிமுத்து (சுயே)
கே. கே. இராமு (சுயே)
ஈ. வி. சின்னத்தம்பி (சுயே)

4. சஞ்சீவிராயன்பேட்டை
கே. எம். கண்ணபிரான் (தி.மு.க.)
மு. நடராசன் (காங்)
வி. ரா. மார்க்கபந்து (ஜனசங்கம்)

5. மொட்டைத் தோட்டம்
க. ஆறுமுகம் (தி.மு.க.)
எஸ். ஜி. விஜயசமூர்த்தி (காங்.)

6. நாராயணப்பநாய்க்கன் தோட்டம்
கே. குசால்தாஸ் (சுதந்.)
ஜி. நாகராசன் (காங்.)

7. சிங்காரத் தோட்டம்
கோ. இராசரத்தின நாயகர் (உ.க.)
பா. சுப்பிரமணி (காங்.)
வி. ஆறுமுகம் (சுயே)
காளி நாயகர் (சுயே)

8. இராயபுரம்
மு. பெருமாள் (தி.மு.க.)
ம. ஆனந்தகிருஷ்ணன் (காங்)

9. மீனாட்சியம்மன்பேட்டை
வி. எஸ். ஆனந்தன் (தி.மு.க.)
தே. இராசவேலு (காங்)
தட்சிணாமூர்த்தி (சுயே)
எஸ். கே. விமலசுந்தரம் (சுயே)

10. பழைய வண்ணாரப்பேட்டை
த. வெங்கடேசன் எம்.சி. (தி.மு.க)
பி. மூர்த்தி நாயக்கர் (காங்)

துறைமுகத் தொகுதி

11. ஏழுகிணறு (வடக்கு)
ஜி. இலட்சுமிபதி எம்.சி. (தி.மு.க.)
மாசிலாமணி (காங்)
சுதாதேவி (ஜனசங்கம்)
சுதர்சன் (சுயே)

12. அம்மன்கோயில் (வடக்கு)
வி. முனுசாமி எம்.சி. (தி.மு.க.)
என். மோகன்ராவ் (காங்)
தமிழ்தாசன் (சுயே)

13. முத்தியாலுப்பேட்டை
அ. செல்வராசன் எம்.சி. (தி.மு.க)
டி. எஸ். பாலசுந்தரம் (காங்)
டி. கே. இராமமூர்த்தி (சுயே)
இ. ஜெயகுமார் (சுயே)

14. வள்ளல் சீதக்காதி நகர்
ஆர். சிலார் மியான் (மு.லீக்)
எஸ். இராமதாஸ் (காங்)

15. மண்ணடி
கே. கிருஷ்ணமூர்த்தி (தி.மு.க.)
கே. குப்புசாமி (காங்)
சோமு (சுயே)
எம். வி. பலராமன் (சுயே)

16. அம்மன்கோவில் (தெற்கு)
கே. கோவிந்தசாமி எம்.சி. (தி.மு.க.)
ஜி. இராசமன்னார் (காங்)
எம். சண்முகம் (சுயே)
எஸ். காத்தலிங்கம் (சுயே)
எம். இராதாகிருஷ்ணன் (சுயே)

17. ஏழுகிணறு (தெற்கு)
கோ. செங்குட்டுவன் (தி.மு.க.)
வி. இராமமூர்த்தி (சுயே)
தி. தாமோதரன் (சுயே)
வி. பி. சிவப்பிரகாசம் (சுயே)
ர. வேணுகோபால் (ஜனசங்கம்)

18. சவுகார்பேட்டை
எஸ். சுதர்சனம் (சுதந்.)
பி. வி. இராமராவ் குப்தா (காங்)
சா. அண்ணாதுரை (சுயே)
பி. ஆனந்தகிருஷ்ணன் (ஜ.ச.)
எத்திராசுலு நாயுடு (சுயே)

19. கொத்தவால்சாவடி
ந. செயராமன் (தி.மு.க.)
ஆ. ம. லோகநாதன் (காங்)

20. கச்சாலீசுவரர்
வி. பொன்னுசாமி (தி.மு.க)
ஜெயசாமராஜ் (காங்)

பேசின்பிரிட்ஜ் தொகுதி

21. இராதாகிருஷ்ணன் நகர்
எஸ். பாலசுந்தரம் (தி.மு.க)
பஞ்சாட்சரம் (காங்)
முத்து (சுயே)

22. ஜீவா நகர்
எம். வரதன் (இடது கம்யூ.)
கோவிந்தராஜ் (காங்)
நெடுஞ்செழியன் (சுயே)

23. செரியன் நகர்
ஜி. கண்ணன் (வலது கம்யூ.)
இரங்கசாமி (காங்)
எலியாஸ் (சுயே)

24. கொருக்குப்பேட்டை
சு. மோகன்ராஜ் (தி.மு.க.)
சீனிவாசன் (காங்)
டி. கன்னியப்ப நாயகர் (சுயே)

25. குமாரசாமி நகர்
ஆர். ஆறுமுகம் எம்.சி. (தி.மு.க.)
இ. வி. ஏ. சுப்பிரமணியம் (காங்)
கே. சந்திரசேகரன் (சுயே)
ஆர். தங்கவேல் நாயகர் (சுயே)

26. டாக்டர் விசயராகவலு நகர்
அப்துல் லத்தீப் (மு. லீக்)
எஸ். எம். சண்முகம் (காங்)
அப்துல் ராப் (சுயே)
வி. மணவாளன் (சுயே)

27. பேசின்பிரிட்ஜ்
கி. எத்திராசன் (தி.மு.க.)
டி. நடராசன் (காங்)
ஏழுமலை (சுயே)
காப்ஸ் பிரபாவதி (சுயே)
பி. குசால்தாஸ் (சுயே)
எம். பி. முத்து (சுயே)

28. கொண்டித்தோப்பு
என். வி. என். சோமசுந்தரம் பி.ஏ.,பி.எல். (தி.மு.க.)
வை. சம்பந்தன் (காங்)

29. பெத்துநாயக்கன் பேட்டை
சி. எஸ். கணேசன் (தி.மு.க.)
டி. எம். முத்துவேல் முதலியார் (காங்)
சி. ஆர். நடராசன் (சுயே)
வரததேசிகன் (சுயே)

30. பெருமாள்கோவில் தோட்டம்
அரு. சக்கரபாணி (தி.மு.க.)
கே. ஏ. சக்கரபாணி (காங்)

பூங்கா நகர்த் தொகுதி

31. கொசப்பேட்டை
பி. பாலகிருஷ்ணன் (சுதந்.)
வி. ஆதிகேசவலு (காங்)
திருவேங்கட முதலியார் (ஜ.ச.)
வி. நடராசன் (சுயே)

32. பெருமாள்பேட்டை
செ. சுந்தரதாசன் (தி.மு.க.)
ஏ. டேவிட் (காங்)

33. கண்ணப்பர் நகர்
மு. கன்னியப்பன் எம்.சி. (தி.மு.க.)
எம். பக்தவத்சலம் (காங்)

34. அன்பழகன் நகர்
அப்துல் ஹக்கீம் (தி.மு.க.)
சி. கே. சிட்டிபாபு (காங்)
சுந்தரம் (ஜ.ச.)
கே. எம். பாலசுப்பிரமணியம் (சுயே)

35. சூளை
டி.கிருஷ்ணமூர்த்தி எம்.சி. (தி.மு.க.)
கே. பக்தவத்சலு நாயுடு (காங்)
பாபு (சுயே)

36. பெரியமேடு
அ. சுப்பிரமணியம் (தி.மு.க.)
கே. மதனகோபால் (காங்)
ஆர். துரைராசன் (சுயே)

37. யானைகவுனி
வி. சானகிராமன் (தி.மு.க.)
பி. குருவிட்டல் (காங்)
கிருஷ்ணசாமி (சுயே)

38. நேதாஜி நகர்
சிட்டிபாபு (ஆசைமுத்து) (தி.மு.க.)
நாராயணபிள்ளை (காங்)

39. எடப்பாளையம்
டபிள்யூ. பி. பி. சுந்தரம் (தி.மு.க.)
ஜேசுபாய் பட்டேல் (காங்)
துங்கர்சி நாராயணதாஸ் (சுயே)

40. பூங்கா நகர்
பொ. கு. இராமதாசு (தி.மு.க)
லாரன்ஸ் (காங்)

பெரம்பூர்த் தொகுதி

41. வியாசர்பாடி
த. இராகவேலு (தி.மு.க.)
சு. முத்துகிருஷ்ணன் (காங்)

42. இளங்கோ நகர்
வி. தனசேகரன் (தி.மு.க.)
எம். ஏ. முத்துக்கிருஷ்ணன் (காங்)
க. சிதம்பரம் (சுயே)

43. பெரம்பூர்
வி. தணிகாசலம் எம்.சி. (தி.மு.க.)
கே. நாராயணசாமி (காங்)
டி. ஆர். விசுவநாதன் (ஜ.ச.)

44. திரு. வி. க. நகர்
கே. லோகநாதன் எம்.சி. (தி.மு.க.)
வி. ஆர். வனசாட்சி (காங்)
சூப்லிராசன் (சுயே)
சி. தாஸ் (சுயே)

45. வாடியா நகர்
டி. நடராசன் எம்.சி. (தி.மு.க.)
டி. சுப்பிரமணியம் (காங்)
அப்துல் ராவூப் (சுயே)
டி. வி. துக்காராம் (சுயே)

46. சத்தியவாணிமுத்து நகர்
மா. கன்னியப்பன் (தி.மு.க.)
பி. வி. நரசிம்மலு (காங்)
ஏ. குப்புசாமி (சுயே)
பி. ஆர். பழனிசாமி (சுயே)

47. புளியந்தோப்பு
எஸ். ஏ. அமீர் (மு.லீக்)
தாவூத் ஷரீப் (காங்)
பி. கோபால் (ஜ சங்.)
மேகநாதன் (சுயே)
வேணுகோபால் (சுயே)

48. டாக்டர் பெசண்ட் நகர்
தி. சு. நல்லதம்பி எம்.சி. (தி.மு.க.)
எல். கோவிந்தராசுலு (காங்)
சமத் (சுயே)
நூர் முகமது உஸ்மான் (சுயே)
எம். முத்துசாமி (சுயே)

49. பட்டாளம்
சு. பாலன் எம்.சி. (தி.மு.க.)
பி. ஈ. தணிகாசலம் (காங்)
ம. கல்யாணசுந்தரம் (சுயே)

புரசைத் தொகுதி

50. தட்டாங்குளம்
எம். வரதராசலு (த.அ.க.)
ஜி. ரங்கபாஷ்யம் (காங்)
பக்தவத்சலு (சுயே)
பாலதாஸ் (சுயே)

51. செம்பியம்
சீதாபதி (இடது கம்.)
சி. தாமோதரன் (காங்)
சி. கன்னியப்பன் (சுயே)
செரீப் சாகிப் (சுயே)
டாக்டர் எம். எம். தாமஸ் (சுயே)

52. அகரம்
மா. மதுரை (தி.மு.க.)
ஜம்புலிங்கம் (காங்)

53. சிறுவள்ளூர்
டி. எஸ். சீவரத்தினம் (தி.மு.க.)
டி. ஆண்டியப்பன் (காங்)
வேலாயுதம் (ஜ.ச.)

54. 'விடுதலை' குருசாமி நகர்
பி. ஈ. பக்தவச்சலு (தி.க.)
பி. என். சுப்பிரமணி (காங்)
முனுசாமி (சுயே)
வேணுகோபால் (சுயே)

55. நாகம்மையார் நகர்
வேலூர் டி. நாராயணன் எம்.ஏ.பி.எல்., எம்.சி. (தி.மு.க.)
கிருஷ்ணமூர்த்தி (காங்)
வீரபத்திரன் (சுயே)

56. அயனாவரம்
ஆ. சண்முகம் (தி.மு.க.)
எதிராசன் (காங்)

57. பன்னீர்செல்வம் நகர்
பலராமன் (தி.மு.க.)
பி. கே. புருஷோத்தமன் (காங்)

58. மறைமலை அடிகள் நகர்
எம். மைனர் மோசஸ் பி.ஏ., பி.எல்., எம்.சி. (தி.மு.க.)
டி. ஜி. வீரராகவலு (காங்)

59. அஞ்சுகம் அம்மையார் நகர்
ந. சு. மணி (தி.மு.க.)
ஆர். பாலசுப்பிரமணியன் (காங்)
ரங்கநாதன் (சுயே)

60. புரசைவாக்கம்
தே. து. இராமானுசம் (தி.மு.க.)
எம். ஜி. அப்பாதுரை (காங்)
ஏ. ஆர். இராமானுசம் (சுயே)

எழும்பூர்த் தொகுதி

61. அண்ணா நகர்
சு. வே. தட்சணாமூர்த்தி (தி.மு.க.)
கு. சிவலிங்கம் (காங்)
கே. துரைசாமி (சுயே)
வை. முனியப்பன் (சுயே)

62. ஷெனாய் நகர்
என். எஸ். தேவராசன் (தி.மு.க.)
பசுபதி தனராஜ் (காங்)

63. நுங்கம்பாக்கம்
எம். எஸ். இராமச்சந்திரன் (தி.மு.க.)
வை. சண்முகம் (காங்)
சி. துளசிராமன் (சுயே)

64. கீழ்ப்பாக்கம்
க. மோகனசுந்தரம் (தி.மு.க.)
எம். கோதண்டபாணி (காங்)

65. சேத்துப்பட்டு
கா. முருகேசன் (தி.மு.க.)
ஆர். எஸ். பால்ராஜ் (காங்)
சீ. தருமன் (சுயே)
க. மாணிக்கவாசகம் (சுயே)

66. கங்காதீசுவரர் கோயில்
நா. கணபதி பி.எஸ்சி.பி.எல். (தி.மு.க.)
ஏ. கண்ணன் (காங்)
டி. தனபால் (சுயே)
போ. து. வெங்கட்ராமன் (சுயே)

67. டாக்டர் அம்பேத்கார் நகர்
ச. கன்னியப்பன் எம்.சி. (தி.மு.க.)
எல். இருதயராஜ் (காங்)
க. ஆரியசங்காரன் (சுயே)

68. எழும்பூர்
கி. பாஸ்கரன் எம்.சி. (தி.மு.க.)
மு. இராசகோபால் (காங்)
அ. கண்ணன் (சுயே)

69. புதுப்பேட்டை
எம். அப்துல் காதர் (மு.லீக்)
எம். எஸ். எஸ். ஹாஜா மொய்தீன் (காங்)
அமலநாதன் (சுயே)
டி. காந்தாராவ் (சுயே)
ஆர். சந்திரன் (சுயே)
எஸ். தணிகாசலம் (சுயே)
எம். நாகூர் மீரான் (சுயே)
மா. வீரராகவன் (சுயே)

70. கோமளீசுவரன் பேட்டை
என். கே. சாகுல் அமீது (தி.மு.க.)
ஆர். கன்னையா பிள்ளை (சுயே)
வெ. பாலச்சந்தர் (ஜ.ச.)
சி. ஜம்புலிங்கம் (சுயே)

ஆயிரம்விளக்குத் தொகுதி

71. ஆயிரம்விளக்கு
பி. கே. கேசவன் (தி.மு.க.)
எம். கோபால் (காங்)
மேன்யுவேல் முனுசாமி (சுயே)

72. அழகிரி நகர்
எம் ஏ. ஜேசுதாஸ் எம்.சி.
எஸ். சிவலிங்கம் (காங்)
சா. து. லோகநாதன் (சுயே)
எம். வரதராசன் (சுயே)

73. பாலசுப்பிரமணியம் நகர்
சி. சிட்டிபாபு எம்.பி. (தி.மு.க.)
எஸ். வி. கந்தசாமி (காங்)

74. அமீர் மகால்
என். சுலைமான் (மு.லீக்)
டி. ஆர். சிவநேசன் (காங்)
அப்துல் ஜபார் நயீம் (சுயே)
எஸ். எச். கான் (சுயே)
ஆ. குப்புசாமி (ஜ.ச.)
ஜே. நடராசன் (சுயே)
கி. பாலசுந்தரம் (சுயே)
ஆ. மு. பிஜாபுரி (சுயே)
பி. ரங்கநாதன் (சுயே)

75. உமறுப்புலவர் நகர்
சையத் கலிபத்துல்லா (மு.லீக்)
ஜே. பி. லால் (காங்)
எம.எஸ்.என். அப்துல் ரகீம் (சுயே)
மூனுசாமி நாயகர் (சுயே)

76. பாரதி நகர்
க. பார்த்தசாரதி (தி.மு.க.)
வி. ஆர். கன்னையா (காங்)
கிருஷ்ணப்ப நாயக்கர் (சுயே)
எஸ். எ. தாஸ் (சுயே)

77. ஆஜாத் நகர்
ஏ. கி. புகழேந்தி (தி.மு.க.)
என். பி. ஏழுமலை (காங்)
டி. கிருஷ்ணமூர்த்தி (சுயே)
சி. பி. சங்கர் (சுயே)

78. இராயப்பேட்டை
த. சதானந்தம் (தி.மு.க.)
என். சண்முகம் (காங்)
கோ. இளவரசு (சுயே)

79. பாரதிதாசன் நகர்
மு. அரங்கநாதன் எம்.சி. (தி.மு.க.)
ஆ. நா. வேலாயுதம் (காங்)
அப்துல் கரீம் (சுயே)
வி. பி. குமரவேலு (சுயே)

80. கிருஷ்ணாம்பேட்டை
டி. குப்புசாமி (தி.மு.க.)
க. நாகலிங்கம் (காங்)
அப்துல் கரீம் (சுயே)

திருவல்லிக்கேணி தொகுதி

81. ஆதிகேசவபுரம்
ப. க. வேணுகோபாலன் (தி.மு.க.)
கி. வெங்கட் (காங்)
பி. ஏ. மூர்த்தி (சுயே)

(8-ம் பக்கம் பார்க்க)

சென்னை மாநகராட்சிமன்றத் தேர்தல்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

82. சிந்தாதிரிப்பேட்டை
நடராசன் (தி.மு.க.)
(ஆடலழகன்)
தி. மணிவண்ணன் (காங்)

83. நரசிங்கபுரம்
வெ. குப்பம்மாள் (தி.மு.க.)
டி. ஜி. சேஷாசலம் (காங்)

84. நேரு நகர்
டாக்டர் நசீர் முகம்மது (மு.லீச்)
கே. மன்னுர் நாயுடு (காங்)
வி. என். சுப்பிரமணியம் (சுயே)

85. திருவட்டீசுவரன் பேட்டை
எஸ். எம். கிருஷ்ணன் எம்.சி. (தி.மு.க.)
ராஜு பிள்ளை (காங்)
பி. என். சுப்பிரமணியராவ் (ஜ.ச.)

86. சேப்பாக்கம்
சி. ஆதிகேசவன் (தி.மு.க.)
ஏ. ஜி. மோகன் (காங்)

87. டாக்டர் நடேசன் நகர்
மு. வரதராசன் (தி.மு.க.)
கே. என். நடராசன் (காங்)
டி. எல். ஒய். நாராயணன் (சுயே)

88. ஜாம் பஜார்
பா. தாமோதரன் (தி.மு.க)
எம். எஸ். சம்மந்தப்பா (காங்)

89. திருவல்லிக்கேணி
பட்சி ராசகோபாலன் (த.அ.க.)
ரகுநாதன் என்கிற
என். ஈ. ராமண்ணு (காங்)
எஸ். கே. சுந்தரம் (சுயே)
பி. சுந்தரராசன் (சுயே)

90. மெரினு
எம். இராசு (தி.மு.க)
ஆர். எத்திராசன் (காங்)

மயிலாப்பூர்த் தொகுதி

91. விவேகானந்தாபுரம்
எஸ். வி. வேலு (தி மு.க.)
வி. நடேச பிள்ளை (காங்)
டி. ஏ. இரத்தினவேலு (சுயே)

92. மாதவபெருமாள்புரம்
அ.சி. துளசிங்கம் எம்.சி. (தி.மு.க.)
எம். என். ஏழுமலை (காங்)

93. காரனேசுவபுரம்
கே. கோவிந்தசாமி எம்.சி. (தி.மு.க.)
செ. ருத்ரமூர்த்தி (காங்)
எம். குப்புசாமி (ஜ.ச.)
தமிழ்மணி (சுயே)
டி. நந்தகுமார் (சுயே)

94 சாந்தோம்
இரா. காசிச்சாமி (தி.மு.க.)
வி. அண்ணுசாமி (காங்)
பி. காளிதாஸ் (சுயே)

95. மைலாப்பூர்
எஸ். கே. சீனிவாசன் (சுதந்)
ஏ. புருஷோத்தம குப்தா (காங்)

96. திருவள்ளுவர் நகர்
த. சாரங்கன் (தி மு.க.)
ரமாதேவி (காங்)
பி. இராகவேல் (சுயே)

97. பிமண்ணன் பேட்டை
அ. செல்வராசன் எம்.சி. (தி.மு.க.)
கே. ஜி. இராதாகிருஷ்ணன் (காங்)

98. இராஜா அண்ணுமலைபுரம்
எஸ். அரிகிருஷ்ணன் (தி.மு.க.)
எம். ரங்கபாஷ்யம் (காங்)
டி. எல்லப்பன் (சுயே)
ஆர். பக்கிரி (சுயே)

99. அவ்வை நகர்
டி. கே. கபாலி எம்.சி. (தி.மு.க.)
ஆர். லோகநாதன் (காங்)
ஜி. முனுசாமி (சுயே)

100. அடையாறு
அ. ச. சங்கரன் (தி.மு.க)
க. அனந்தகிருஷ்ணன் (காங்)
மா. தங்கேஸ்வரன் (சுயே)
துரைசாமி (சுயே)
எம். ஜெயராமன் (சுயே)

தியாகராய நகர் தொகுதி

101. கோ. சு. மணி நகர்
இரா. சம்பந்தம் எம்.சி. (தி.மு.க.)
என். ஜே. கன்னையா (காங்)
என். கண்ணன் (சுயே)

102. கலைவாணர் நகர்
சி. ஆர். நரசிம்மன் (சுதந்.)
ஜி. மாசிலாமணி (காங்)
எம். ஏ. துரை (சுயே)

103. நக்கீரர் நகர்
வை. பாலசுந்தரம் (தி.மு க.)
ஆர். இலட்சுமிகாந்தன் (காங்)
பி. பி. எஸ். மணி (சுயே)

104. தேனும்பேட்டை
டி. எம். சண்முகம் (தி.க.)
ஆர். கண்ணப்பன் (காங்)

105. தியாகராயநகர்
என். எஸ். இராமநாத அய்யர் (சுதந்.)
கே. டி. சோமசுந்தரம் (காங்)
ஆர். பி. சிவப்பா (சுயே)
எஸ். விசுவநாதன் (சுயே)

106. இராஜாஜி நகர்
பி. சே. முத்துராமலிங்கம் (தி.மு.க.)
கே. எம். சுப்பிரமணியம் (காங்)
இலட்சுமிபதி (சுயே)
டி. பி. எஸ். வரதன் (சுயே)

107. கலைஞர் கருணாநிதி நகர்
சி பி பவளவண்ணன் எம்.சி. (தி மு.க)
பி. குமாரசாமி (காங்)
சிங்காரம் (சுயே)

108. வ. உ. சி. நகர்
ஜி. இராசமாணிக்க நாயகர் (உ.க.)
எம். அர்ச்சுனன் (காங்)
கே. சீனிவாசன் (சுயே)
முனு லோகநாதன் (சுயே)

109. சத்தியமூர்த்தி நகர்
இரா. சடகோபன் எம்.சி. (தி.மு.க.)
எஸ். என். கண்ணன் (காங்)
சா. நாராயணன் (சுயே)
மணி (சுயே)
எம். முனுசாமி (சுயே)

110. ஆழ்வார் பேட்டை
ஏ. லோகநாதன் (தி.மு.க.)
ஜி. குமாரசாமி (காங்)
டி. நடராசன் (சுயே)

சைதாப்பேட்டை தொகுதி

111. அமைந்தகரை
செ. மோகனப்பா (தி மு.க.)
ஜி. இராதாகிருஷ்ணன் (காங்)
எஸ். இராமமூர்த்தி (சுயே)

112. பெரியார் நகர்
சி. வி. சிட்டிபாபு (தி.மு,க)
ஆர். நடராசன் (காங்)
எத்திராசன் (சுயே)
பெருமாள் (சுயே)

113. வடபழனி
சோ. கி. மூர்த்தி (தி மு க.)
இராசசேகரன் (காங்)
துரைக்கண்ணு (சுயே)

114. நெடுஞ்செழியன் நகர்
சா. கணேசன் எம்.சி. (தி.மு.க.)
அப்பாவு (காங்)

115. எம்.ஜி.ஆர் நகர்
கோ. அய்யாவு (தி.மு.க.)
ப. சண்முகம் (காங்)
க. செல்வராசு (சுயே)
பா. நாகப்பன் (சுயே)

116. காமராஜ் நகர்
வி. தேவநாதன் (சுதந்.)
எம். எஸ். சித்திரவேல் நாயக்கர் (காங்)
சி. நரசிம்மன் (ஜ.ச.)

117. குமரன் நகர்
எஸ் பி. இரத்தினம் (தி.மு.க)
தட்சிணமூர்த்தி (காங்)
தேவராச முதலியார் (சுயே)

118. சைதாப்பேட்டை
சைதை சம்பந்தம் எம்.சி. (தி.மு.க.)
ஆ. சுப்பிரமணியம் (காங்)

119. ஜி. டி. நாயுடு நகர்
ஆர். எஸ். சீதரன் (தி.மு.க.)
ஏ. டி. குப்பாஜி (காங்)
ரா. குஞ்சிதபாதம் (சுயே)
சுப்பாராவ் (சுயே)
ராகவலு (சுயே)

120. கிண்டி
ஆர். டி. பாஸ்கரன் எம்.சி. (தி.மு.க.)
ம. பாலகிருஷ்ணன் (காங்)

எசமானர்கள் அல்லர்!

"சட்டமன்ற உறுப்பினர்கள், வாக்காளர்களின் -- நாட்டின் ஊழியர்கள்தாம்; எசமானர்கள் அல்லர்.''

—காந்தியார்

எண்ணூர் பவுண்டரீஸ் தொழிலாளர்கட்கு:

சென்னை, அக். 18—

எண்ணூர் பவுண்டரீஸ் தி.மு.க. தொழிலாளர் குழுச் செயலாளர் த. ச. சேகர் அறிவிப்பதாவது :—

"சென்னை நகரில் மாநகராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிடும் தி.மு.க. — தோழமைக் கட்சிகளின் வேட்பாளர்கள் அனைவரும் வெற்றிபெறும் வகையில், 120 வட்டங்களிலும் உள்ள நமது தொழிலாளத் தோழர்கள் இரவு பகல் பாராது பாடுபடுமாறு கேட்டுக்கொள்கிறேன்."

சி. தமிழரசி

அறிவிப்பு

"தலைமைக் கழகக் கட்டளையின் படி சென்னை மாநகராட்சித் தேர்தல் பணிகளில் நான் ஈடுபட வேண்டியதையொட்டி, ஏற்கனவே ஒப்புதலளித்திருக்கிற அக்டோபர் 21 முதல் 26-வரை ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்ற வெளியூர்க் கூட்டங்களில் கலந்துகொள்ள இயலாதிருக்கிறேன். மாற்றுத் தேதிகள் விரைவில் அறிவிக்கிறேன்; சகோதரர்கள் பொறுத்தருள வேண்டுகிறேன்"

எனத் தோழியர் சி. தமிழரசி பி.ஏ. அறிவிக்கிறார்.

மாற்றாரின் கையிலில்லை!

"நினைவிலிருக்கட்டும் -- நம் நாட்டின் விமோசனம் நம் கையில் இருக்கிறது--மாற்றாரின் கையில் இல்லை.''

—காந்தியார்

'கழகத் தோழர்களின் பாசம் கவலைகளை விரட்டியடிக்கிறது'

'மாநகராட்சித் தேர்தல் பணி செவ்வனே நடைபெறுவதறிந்து அகமிக மகிழ்கிறேன்'

'நமது தோழர்களின் பொறுப்புமிக்க பணியைக் கழகம் பெற்றுக வேண்டும்' — கருணாநிதிக்கு அண்ணா மடல்

அறிஞர் அண்ணா அவர்கள் பொதுப்பணித் துறை அமைச்சர் மு. கருணாநிதி அவர்களுக்கு எழுதியுள்ள மடலில் குறிப்பிட்டிருப்பதாவது :—

தம்பி !

உன் கடிதம் புதிய மகிழ்ச்சியை ஊட்டிற்று ; வீட்டில் அனைவருக்கும் என் அன்பினையும், வணக்கத்தையும் தெரிவிக்கவும்.

அமைச்சர்கள், மாவட்டங்களிலுள்ள நமது தோழர்கள் அனைவருக்கும் என் நன்றி—வணக்கம்.

அன்பில், விழா நடத்தியது பற்றிய உன் குறிப்பு மில்லரின் மருந்தைவிட எனக்குப் பயனளித்தது; அவர் போன்ற நமது தோழர்களின் பொறுப்புமிக்க பணியைத்தான் இனிக் கழகம் பெரிதும் பெற்றுக வேண்டும்.

நோய் நீங்கிய பிறகும் நான், முன்புபோல கடினமாக உழைக்க முடியுமா என்ற கவலை வாட்டியபடி இருக்கிறது; கழகத் தோழர்களின் பாசம், எல்லாக் கவலைகளையும் விரட்டியடிக்கிறது. எல்லோருக்கும் என் நன்றி.

மாநகராட்சி மன்றத் தேர்தல் காரியங்கள் செம்மையாக நடைபெற்று வருகின்றன என்று அறிந்து அகமிக மகிழ்கிறேன். வெற்றிச் செய்தியை எதிர் பார்த்தபடி இருக்கிறேன்.

இராசாராமும், செழியனும் கண்ணை இமை காப்பதுபோல என்னைக் காத்து வருகிறார்கள்.

விருந்தினரானார் டாக்டர் மில்லர்

நியூயார்க், அக். 22—அண்ணா அவர்களுக்கு அறுவைச் சிகிச்சை செய்த டாக்டர் மில்லர், அக். 20-ம் நாளன்று, தாம் 'மருத்துவர்' என்ற நிலையில் அல்லாமல், தம் குடும்பத்தினருடன் விருந்தினர்' ஆக அண்ணா அவர்களைச் சென்று பார்த்தார்.

சென்னை மாநகராட்சி நிகழ்ச்சிகள்

சென்னை-சைதாப்பேட்டை ஜோன்ஸ் சாலையில் உள்ள மாநகராட்சி மத்திய பள்ளியிலுள்ள கூடைப் பந்து விளையாட்டு அரங்கத்தை பொதுப் பணித்துறை அமைச்சர் திரு. மு. கருணாநிதி அவர்கள் திறந்துவைப்பார் ; இவ் விழா 23-10-68 மாலை 7-மணிக்கு மேயர் டாக்டர் அபிபுல்லா பேக் தலைமையிலும்—முரசொலி மாறன் முன்னிலையிலும் நடைபெறும் ; வரவேற்பு: சைதை சம்பந்தம் எம்.சி., சா. கணேசன் எம்.சி.

சென்னை-தண்டையார்பேட்டை தொத்து நோய் மருத்துவமனையில் சிறப்புப் பகுதியை (ஸ்பெஷல் வார்டு) செய்தித்துறை அமைச்சர் திருமதி சத்தியவாணிமுத்து அவர்கள் திறந்துவைப்பார் ; இவ்விழா 23—10—68 மாலை 5-மணிக்கு மேயர் டாக்டர் அபிபுல்லா பேக் தலைமையில் நடைபெறும் ; வரவேற்பு : வி. முனுசாமி எம். சி., எம். வேதாசலம் எம்.எல்.ஏ.

ஏ. வி. பி. ஆசைத்தம்பி

சென்னையில் கலந்து கொள்ளும் நிகழ்ச்சிகள்

அக். 23 இரவு 7-30 மணி : 61-வது வட்டம் ; 8-30 மணி : 64-வது வட்டம் ; 9 மணி : 65-வது வட்டம் ; 9-30 மணி : 69-வது வட்டம் ; 10-30 மணி : 72-வது வட்டம் ; 11-30 மணி : 78-வது வட்டம்

அக். 24 இரவு 7 மணி : 61-வது வட்டம் ; 8 மணி : 64-வது வட்டம் ; 8-30 மணி : 66-வது வட்டம் ; 9-30 மணி : 34-வது வட்டம் ; 10-30 மணி : 3-வது வட்டம் ; 11-30 மணி : 65-வது வட்டம்.

கலை நிகழ்ச்சி

சென்னை 30-வது வட்டம்

கழக வேட்பாளர் அரு. சக்கரபாணியை ஆதரித்து 23—10—68 மாலை 6-மணிக்கு விநாயக மேஸ்திரி தெருவில் (டி. டி. வி. உயர்நிலைப் பள்ளி அருகில்), டி. கே. திருவேங்கடம் தலைமையிலும்—அமிர்தராசு முன்னிலையிலும் புதுக்கோட்டை இளங்கோவன்—பூங்கோதை குழுவினரின் கலைநிகழ்ச்சி நடைபெறும்.

நடக்க இருப்பவை

பொதுக்கூட்டங்கள்

23—10—68

சென்னை 111-வது வட்டம்

கழக வேட்பாளர் ஏ. மோகனப்பாவை ஆதரித்து தென்னவர் மன்றச் சார்பில் இரவு 8 மணிக்கு சூளைமேடு பஜனைக் கோயில் பின்புறம் ; தலைவர் : எம். சௌளடையா ; பேசுவோர் : என். வி. நடராசன் எம்.எல்.சி., காயிதேமில்லத் முகமது இஸ்மாயில், மா. செங்குட்டுவன், சி. வி. சிட்டிபாபு, சி. வி. மலையன், தெ. அன்பரசு, சின்னராசு, தமிழ்ச் செல்வன், கோவிந்தராசன், அரங்கபாண்டியன், கி. வரதராசன்.

சென்னை 61-வது வட்டம்

கழக வேட்பாளர் சு. வே. தட்சிணாமூர்த்தியை ஆதரித்து கலைவாணர் பொது நல மன்றச் சார்பில் அரும்பாக்கம் என். எஸ். கே. நகரில் ; தலைவர் : அ. மு. இஸ்மாயில் ; பேசுவோர் : அமைச்சர் கே. ஏ. மதியழகன், ஏ. வி. பி. ஆசைத்தம்பி எம். எல்.ஏ., சி. சிட்டிபாபு எம்.பி., ஆர். கிருஷ்ணன், சா. சுந்தரம், வி. ஆர். கிருஷ்ணன்.

சென்னை 93-வது வட்டம்

கழக வேட்பாளர் கே. கோவிந்தசாமியை ஆதரித்து, இரவு 7 மணிக்கு கோமதி நாராயணசாமி செட்டி தெருவில் ; தலைவர் : அன்சர்பாட்சா ; பேசுவோர் : ப. உ. சண்முகம் எம்.எல்.சி., குசேலர் எம்.பி., சிட்டிபாபு எம்.பி., எம். எஸ். அப்துல்காதர், எம். நாகப்பன், மொய்தீன்.

சென்னை—வண்ணை

எம். ஜி. ஆர். ரசிகர் மன்றச் சார்பில் மாலை 7 மணிக்கு தண்டையார்பேட்டை மணிக்கூண்டு அருகில் ; தலைவர் : பி. ஜி. மாரியப்பன் ; பேசுவோர் : ம. பொ. சிவஞானம் எம்.எல்.ஏ., க. அறிவழகன் எம்.எல்.சி., கா. வேழவேந்தன், ஆலடி அருணா எம். எல்.ஏ., அன்பில் செழியன், சு. மோகனராசு, வீரஜின்னு, பி. கே. மாரியப்பன், கே. எம். கண்ணபிரான் ஜி. ராசரத்தின நாயக்கர் நடிகர்கள் அசோகன், ஆனந்தன், எம். ஆர். ஆர். வாசு, சோ.

பள்ளப்பட்டி

தி. மு. க. சார்பில் மாலை 7 மணிக்கு காளியம்மன் கோயில் திடலில் ; தலைவர் : பி. சுப்பையா ; பேசுவோர் : டாக்டர் சேதுராசு, ஏ. துரைக்கண்ணன், வே. கருணாகரன், எஸ். ஏ. ரசாக், பெ. குருசாமி, செல்லையா, ஏ. எஸ். கனி. (திருவில்லிபுத்தூர் துரை-நாராயணன் குழுவினரின் கலைநிகழ்ச்சி நடைபெறும்.)

போட்டியிலிருந்து சுயேச்சை வேட்பாளர் விலகினார்

சென்னை, அக். 21—சென்னை 115-வது வட்டத்தில் சுயேச்சையாக வேட்பு மனுத் தாக்கல் செய்திருந்த தோழர் கே. செல்வராஜ் தெரிவித்திருப்பதாவது :—

"அக்டோபர் 27-ல் நடக்கவிருக்கும் மாநகராட்சித் தேர்தலில், சுயேச்சை வேட்பாளனாக மனுத் தாக்கல் செய்திருந்த நான், கழகக் கட்டுப்பாட்டுக் கிணங்க இப் போட்டியிலிருந்து விலகிக் கொள்கிறேன் என்பதை இதன் மூலம் தெரிவித்துக் கொள்கிறேன்.

"மேலும், என்னை ஆதரித்தவர்களும் நண்பர்களும், எனது தோழரும் கழக வேட்பாளருமான கோ. அய்யாவுக்குத் தங்கள் ஆதரவையும் ஒத்துழைப்பையும் அளித்து வெற்றிபெறச் செய்யும் வகையில், கழகச் சின்னமான 'உதய சூரிய'னில் முத்திரையிட வேண்டுகிறேன்."

சுப்பிரமணியத்தின்.....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆண்டபோது பெருக்கித் தர முடியாத வசதிகளை — தி. மு. கழகம் தமிழக ஆட்சிப் பொறுப்பை ஏற்றபின் — பெருக்கிக் காட்டியிருக்கிறது மாநகராட்சியின் கழக நிர்வாகம் !

வாய் புளித்ததோ — மாங்காய் புளித்ததோ என்று கேட்டுவிட்டார் சி. சுப்பிரமணியம் — சுலபத்தில் !

கேள்வி அவரையும், அவரது கட்சியையும்தான் குற்றவாளிக் கூண்டில் ஏற்றுகிறது என்பதனை, சி. சுப்பிரமணியம் மேலே கண்ட விளக்கத்தின் பின்னராவது உணர்ந்து கொள்வாராக !

மத்திய ஆட்சியில் — மாநில நிர்வாகத்தில், 'இனி போடுவதற்குப் புதிய வரிகள் இல்லை' என்ற நிலையை உண்டாக்கியதே சுப்பிரமணியத்தின் கட்சிதான் !

உலகிலேயே 'வரிப் பளு அதிகம்' என்ற 'சாதனை'யைப் படைத்தது — சுப்பிரமணியமே பதவி வகித்த மத்திய அரசுதான் !

இனி எங்கள் மாநிலத்தில் போடுவதற்குப் புதிய வரிகள் இல்லை' என்று—இதுவரையில் காங்கிரசார் போட்டுவிட்டுச் சென்றிருக்கும் வரிப் பளுவை—திட்டக் குழுவின் துணைத் தலைவர் காட்கில் அவர்களிடமே அண்மையில் சுட்டிக் காட்டியது, தமிழக முதல்வர் அண்ணா அவர்கள் தான் !

தனது கேள்வி யாரைத் தாக்கும் என்பதனை, இனியாவது சி. சுப்பிரமணியம் அவர்கள் உணர்ந்து கொள்ளட்டும் !

— எஸ். ஆர்.

Madras State Electricity Board

TENDER NOTICE

Sealed tenders are invited for printing of 1000 Copies of Madras State Electricity Board Manual Volume I, as per specification, a copy of which can be had from the Office of the Chief Engineer for Electricity, 157, Mount Road, Madras-2.

Tenders shall be sent in duplicate so as to reach the undersigned not later than 11 A.M. on 31—10—1968, and will be opened at 3 P.M. on the same day in the presence of such of the tenderers as may wish to be present.

CHIEF ENGINEER FOR ELECTRICITY

157, Mount Road,
Madras-2

தமிழக மின்சார வாரியம்

K 2-காண்டிராக்ட்

குறிப்பு எண் : KC 142

டெண்டர் செட்டின் விலை ரு. 10.30.

தமிழக மின்சார வாரியம்—கோதையாறு நீர் மின் திட்டம் Dam II Building masonary in Block IV from Ch 220 Ch 302 from R.L +1100 to 1155. ஸ்பெஸிபிகேஷன் No. KC. 142.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள குறிப்புகளின்படி அதனுடைய முகவுரையில் எழுதப்பட்டு முத்திரையிட்ட டெண்டர்கள் கீழே கையொப்பமிட்டுள்ளவரால் அல்லது அவரால் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதியால் அவரது அலுவலகத்தில் 26—11—68 அன்று மாலை 3 மணி வரையில் பெற்றுக்கொள்ளப்படும். அவைகள் அதே நாளில் பிற்பகல் 4 மணிக்கு அங்கு வந்திருக்கும் டெண்டர்தாரர்கள் அல்லது அவர்கள் பிரதிநிதிகளின் முன்னால் திறக்கப்படும்.

டெண்டர் செட்டுகளின் நகல்கள் (மாற்றத்தக்கதல்ல) ஒவ்வொரு செட்டிற்கும் மேலே குறிப்பிட்டுள்ளபடி ரூ. 10.30 (ரூபாய் பத்தும் மற்றும் பைசா முப்பது மட்டும்) (விற்பனை வரி உட்பட) செலுத்தி, கீழே கையொப்பமிட்டுள்ளவரின் அலுவலகத்திலிருந்து பெறலாம். இத்தொகையானது எந்தச் சந்தர்ப்பத்திலும் திருப்பித் தரப்படமாட்டாது. டெண்டர் செட்டுகள் விற்பனைக்குக் கிடைக்கும்.

மேலே குறிப்பிட்டுள்ள வேலைக்கான பிணைத் தொகை ரூ. 10,000 (பத்தாயிரம் ரூபாய் மட்டும்) கீழே ஒப்பமிட்டுள்ளவரின் அலுவலகத்தில் முன்னதாகச் செலுத்தி அதற்கான செலுத்து சீட்டை டெண்டர் நகலுடன் இணைக்கப்பட வேண்டும். எக்காரணத்தை முன்னிட்டும் 'செக்கு'கள் (cheques) ஏற்கப்படமாட்டா.

வாரியத்தினரால்குறிப்பிட்டுள்ள மனு பாரத்தில் இல்லாத டெண்டர்கள் அல்லது இறுதித் தேதி நேரத்திற்குப் பின்னர் சமர்ப்பிக்கப்பட்ட டெண்டர்கள் கட்டாயமாக நிராகரிக்கப்படும். கீழே ஒப்பமிட்டுள்ளவருக்கு வேலைகளை, சில அல்லது எல்லா டெண்டர்தாரர்களுக்கும் பகிர்ந்து வழங்கவும் அல்லது சில அல்லது எல்லா டெண்டர்களையும் ஏற்றுக்கொள்ளவோ, காரணம் சொல்லாமல் மறுக்கவோ உரிமையுண்டு.

தபால் போக்குவரத்தில் ஏற்படும் தாமதத்திற்கும் காணாமல் போகும் எந்த டெண்டர் செட்டுக்கும் மின்சார வாரியம் பொறுப்பாளியாகாது.

மேற்பார்வை பொறியாளர்,
கோதையாறு நீர் மின் திட்டம்

கோதையாறு,
மேற்குமலை அஞ்சல்,
கன்னியாகுமரி மாவட்டம்.

தமிழக மின்சார வாரியம்

மின்துறைப் பொருட்களை ஏற்றிச் செல்வது

குத்தகை விளம்பரம்

அடியிற் கையொப்பமிட்டவரிடம் 28—10—68 பிற்பகல் 2 மணி வரை கீழ்க்கண்ட ஒப்பந்த வேலைக்கான உறையிடப்பட்ட குத்தகைகள் (Sealed Tenders) வரவேற்கப்படுகின்றன.

குறிப்பு :—

31—3—1969 முடிய மின்சார வாரிய பொருட்களை திருச்சி இரயில்வே கிடங்கிலிருந்து அல்லது திருச்சியிலும் திருச்சி சுற்று வட்டாரத்திலுள்ள எந்த இடங்களிலிருந்தும், திருச்சி மின் மத்திய பொருட்-கிடங்கிற்கும்,திருச்சி மின் மத்திய பொருட் கிடங்கிலிருந்து திருச்சி இரயில்வே கிடங்கிற்கோ அல்லது திருச்சி அதன் சுற்று வட்டாரங்களிலுள்ள எந்த இடத்திற்கும் ஏற்றிச் செல்வது.

குத்தகை நிபந்தனைகள் பற்றிய பிரதியும் படிவங்களும் ரூ. 2.06 பைசா (திருப்பிக் கொடுக்கப்படாதது) ஒவ்வொரு குறிப்பிற்கும், பண அஞ்சல் மூலமோ, கோரியோ திருச்சி மின் திட்ட அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

மேற்பார்வை பொறியாளர்,
திருச்சி மின் திட்டம், திருச்சி-1

திருவாரூர் நகர தி. மு. க. செயலாளர் நடவடிக்கை

தலைமைக் கழக அறிவிப்பு

திருவாரூர் நகர தி. மு. க. கிளை உறுப்பினர்களான சு. தென்கோவன், ஆ. பெ. பால்ராசு, டி. கே. தண்டபாணி, வெ. இராசன், ச. இராதா ஆகிய தோழர்கள்மீது திருவாரூர் நகர தி. மு. கழகச் செயலாளரால் எடுக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படும் நடவடிக்கை, 'முறைப்படி எடுக்கப்பட்டதல்ல' என்று தெரிய வருவதாலும், முறைக்கு மாறாகத் தங்கள் பேரில் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை குறித்துத் தக்க விசாரணை செய்து நீதி வழங்குமாறு சம்பந்தப்பட்ட தோழர்கள் தலைமைக் கழகத்திற்கு முறையிட்டுக் கொண்டுள்ளதாலும், அதன்பேரில் முறைப்படி விசாரணை செய்து முடிவு அறிவிக்கும் வரை மேற்குறிப்பிட்டுள்ள தோழர்கள்மீது திருவாரூர் நகர தி. மு. க. கிளைச் செயலாளர் எடுத்துள்ளதாக அறிவிக்கப்படும் நடவடிக்கை, நடைமுறைக்கு வருவது நிறுத்தி வைக்கப்படுகிறது.

'அறிவகம்', சென்னை-13
20—10—68

என். வி நடராசன்,
அமைப்புச் செயலாளர், தி.மு.க.

குடிசை வாழ்வோர் திட்டத் துவக்க விழா

சென்னை-தண்டையார்பேட்டை வ.உ.சி. நகர் குடிசை வாழ்வோர் மேம்பாட்டுத் திட்டத்தை 23—10—68 மாலை 6-30 மணிக்கு சட்ட அமைச்சர் திரு. செ. மாதவன் தலைமையில் தொழில் அமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன் துவக்கிவைப்பார்.

ROJA
ரோஜா பாக்கு & புகையிலை
N. V. K. M. & சன்ஸ், திண்டுக்கல்

திராவிட முன்னேற்ற ஏடு உரிமையாளர்: திரு. இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ., எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியீட்டாளராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு ... ஆரம்பித்தது ... சென்னை ...